**SUBORDINATE COURT, PADMANABHAPURAM**

**CASE NO.MCOP. 34/2021**

**Deposition of R.W.1- Angles**

**Dated: 12.09.2025**

**<u>மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

விபத்து இரண்டு வாகனங்கள் மோதி ஏற்பட்ட விபத்து என்றால் சரிதான். TN 75 W 0895 மற்றும் TN 75 AE 1600 ஆகிய வாகனங்கள் மோதி விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான். வாகன விபத்தில் நிவின் என்பவர் இறந்து விட்டார் என்றால் சரிதான். நிவினின் பெற்றோர்கள் இம்மனுவின் மனுதாரர்கள் என்றால் சரிதான். இறந்து போன நபர் வாகன உரிமையாளர்இல்லை எனவே அவர் அந்த வாகனத்திற்கு காப்பீடு செய்ய வேண்டிய அவசிம் இல்லை. உரிமையாளர் தான் காப்பீடு செலுத்த வேண்டும். ஆனால் இறந்தவரை 3ம் தரப்பினராக கருத மாட்டோம். இறந்து போன நபர் காப்பீடு நிறுவனத்தை பொறுத்தவரை 3ம் தரப்பினர் என்று சொன்னால் சரியல்ல. விபத்து சமயம் காப்பீடு ஊர்ஜிதத்தில்தான் இருந்தது. எனவே மனுதாரர்களுக்கு இழப்பீடு கொடுக்க வேண்டும் என்றால் சரியல்ல.